

கழக தலைவர் – தமிழ்நாடு முதலமைச்சரின் ஆணைக்கிணங்க அண்ணா அறிவாலயத்தில் கலை இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை தலைவர் வாகை சந்திரசேகர் தலைமையில் கலைஞரின் நூற்றாண்டு விழா ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் செயலாளர்கள் பொள்ளாச்சி மா. உமாபதி, கலைமாமணி இறையன்பன் குத்தூஸ், வண்ணை அரங்கநாதன், துணைத்தலைவர் எம்.ஆர்.ஆர்.வாசு விக்ரம், துணைச்செயலாளர்கள் கவிஞர் நன்மாறன், எழில்மாறன் செல்வேந்திரன், மதுரை சி. வீரகணேசன், மீனா ஜெயகுமார், கே.வி. குப்பம் சி. கோபி ஆகியோர் பங்கேற்றனர்.



ஈரோடு மாவட்டம் கொடுமுடி ஒன்றியத்தில் ஒன்றிய கழக செயலாளர் மு.சின்னுசாமி ஏற்பாட்டில் அதிமுகவை சேர்ந்த 25க்கும் மேற்பட்டோர் அக்கட்சியிலிருந்து விலகி வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் சு.முத்துசாமி முன்னிலையில் தி.மு.கழகத்தில் இணைந்தனர். கழகத்தில் இணைந்த அனைவரையும் கருப்பு சிவப்பு இருவண்ண சால்வை அணிவித்து வரவேற்றார். நிகழ்வில் கழக துணை பொதுச்செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான அந்தியூர் ப.செல்வராசு, கே.இ.பிரகாஷ், கே.குமார்முருகேஸ், கண்ணையன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### ஆண்டு முழுவதும்

# முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவினை கொண்டாடுவோம்!

## தி.மு.க. விவசாய அணி நிர்வாகிகள் கூட்டத்தில் தீர்மானம்!

சென்னை, மே 24-

தி.மு.க. விவசாய அணி மாநில நிர்வாகிகள் கூட்டம் (21.5.2023) தி.மு.க. விவசாய அணி மாநில நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டம் 21.5.2023 ஞாயிற்றுக்கிழமை காலை 11.00 மணி அளவில், கோவை, கிஸ் கால் கிராண்ட் ஒட்டலில், விவசாய அணி துணைத் தலைவர் இரா. தமிழ்மணி தலைமையில், விவசாய அணிச் செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயன் வரவேற்புரையாற்றிட நடைபெற்றது.

இக்கூட்டத்தில் விவசாய இணைச் செயலாளர்கள் எஸ்.அப்துல்காதர், கள்ளிப்பட்டி மணி, மா. முத்துராமலிங்கம், குறிஞ்சி என்.சிவகுமார் - துணைச் செயலாளர்கள் ர்.டி.ஏ.ஆதிசேஷன், மதுரை ஆர்.கணேசன், கீழப்பாவூர் கு.செல்லப்பா, டி.எம்.அரியப்பன், கிருஷ்ணகிரி டேம் டி.வெங்கடேசன், இராமநாதபுரம் என்.நல்லசேதுபதி., கள்ளக்குறிச்சி த.சித்தார்த்தன், சூடப்பட்டி சுப்பிரமணியன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் விவரம் வருமாறு:

தமிழே உயிராக, தமிழினமே உணர்வாக, தமிழர் நலனும் தமிழ்நாட்டின் வளர்ச்சியுமே வாழ்நாள் செயல் திட்டமாகக் கொண்ட ஓய்வில்லாச் சூரியனும்தனது 94 ஆண்டு ஆயுட்காலத்தில் 80 ஆண்டு கால பொதுவாழ்க்கைக்குச் சொந்தக்காரரும் ஒரு நூற்றாண்டுகால திராவிட இயக்க வரலாற்றில் முக்கால் நூற்றாண்டுகாலப் பங்களிப்பாளரும் அரை நூற்றாண்டு காலம் கழகத்தின் தலைவராக இருந்து தமிழ்நாட்டு அரசியலின் அச்சாணியாக செயல்பட்டவரும் களம் கண்ட 13 தேர்தல்களிலும் வெற்றி கண்ட சாதனையாளரும் ஐந்து முறை தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்று மாநிலத்தின் ஒவ்வொரு குடும்பத்திற்கும் நலன் விளைவிக்கும் திட்டங்களை வழங்கியவரும் இந்திய ஜனநாயகக் காவலராகத் திகழ்ந்த மூத்த அரசியல் தலைவரும் இலக்கியம் கவிதை இதழியல் நாடகம் திரைப்படம் எனத் தொட்ட துறைகள் அனைத்திலும் வெற்றி முத்திரை பதித்த பன்முகத்திறன் கொண்ட படைப்பாளரும் - தான் ஆட்சிக் கட்டிலில் முதலமைச்சராக அமர்ந்த போதெல்லாம் தமிழ்நாட்டு விவசாயிகளின் நலனை முன்னிருத்தி, அவ்விவசாயிகளுக்காக இலவச மின்சாரம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை வகுத்து, விவசாயிகளின் பாதுகாவலனாக இருந்தவரும் உலகெங்கும் வாழும் தமிழர்களின் நெஞ்சங்களில் நிறைந்தவருமான நம் ‘தமிழினத் தலைவர்’ கலைஞர் அவர்களின் நூற்றாண்டு 2023 சூன் 3ஆம் நாள் தொடங்கவுள்ளதையொட்டி;

நூற்றாண்டு நாயகர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை எழுச்சியோடும் உணர்ச்சியோடும் எங்கெங்கும் நடத்திட வேண்டுமென தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற தி.மு.க. உயர்நிலை செயல்திட்டக் குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி;

சூன் 3அன்று வடசென்னையில் நடைபெறும் தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழாப் பொதுக்கூட்டத்திலும்;

சூன் 20ஆம் நாள் திருவாரூரில் எழிலுற அமைக்கப்பட்டுள்ள கலைஞர் கோட்ட திறப்பு விழாவிலும்;

2023 சூன்3 தொடங்கி, 2024 சூன் வரை ஓராண்டு காலத்திற்குத் தொடர்ச்சியான நிகழ்ச்சிகளைத் திட்டமிட்டு நடத்திடவும்;

“ஊர்தோறும் தி.மு.க.” எனும் தலைப்பில், கிளை அளவில் இருக்கும் நமது பழைய கொடிக் கம்பங்களைப் புதுப்பித்து, புதிய இருவண்ணக் கொடியேற்றிடவும்;

“எங்கெங்கும் கலைஞர்” என்ற அடிப்படையில், கலைஞரின் முழு உருவச் சிலை, மார்பளவு சிலைகளை அமைப்பதற்கான முயற்சிகளில் கழக விவசாய அணியினர் ஈடுபடுத்திக் கொள்ளவும்;

“கழகமே குடும்பம்” எனும் தலைப்பில், பொற்கிழி வழங்க ஏற்பாடு செய்வதில் கழக விவசாய அணியினர் சிறிய அளவிலாவது பங்கேற்றிடவும்;

“என்றென்றும் கலைஞர்” எனும் தலைப்பில், கருத்தரங்கம், பொதுக்கூட்டம் போன்ற நிகழ்வுகளில் தி.மு.க. விவசாய அணியின் மாநில நிர்வாகிகள் மற்றும் மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் நிர்வாகிகள் பெருந்திரளாக கலந்து கொண்டு;

தமிழ்நாடு முழுவதும் “தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா”வினை தி.மு.க. விவசாய அணி மிகச் சிறப்பாக எழுச்சியுடன் கொண்டாடிட இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### மூலனூர் ஒன்றியம் - கோட்டை மூலனூர் - கொளத்துப்பாளையம் பேரூராட்சி-தாராபுரம் நகராட்சி பகுதிகளில்

# ரூ.7.42 கோடி மதிப்பீட்டில் புதிய திட்டப்பணிகள்!

## அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன் - என்.கயல்விழி செல்வராஜ் துவக்கி வைத்தனர்!

திருப்பூர், மே 24 -

மூலனூர் ஒன்றியம், கோட்டை மூலனூர், கொளத்துப்பாளையம் பேரூராட்சி, தாராபுரம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ரூ.7.42 கோடி மதிப்பீட்டில் கால்நடை மருந்தகம் மற்றும் புதிய நியாயவிலைக்கடைகளை திறந்து வைத்தும், புதிய தார் சாலை அமைக்கும் பணிகளை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் துவக்கி வைத்தனர்.

திருப்பூர் மாவட்டம், மூலனூர் ஒன்றியம், மூலனூரில் கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பில் ரூ.48.35 இலட்சம் மதிப்பீட்டில் கால்நடை கிளை மருந்தகத்தை திறந்து வைத்தும், கோட்டை மூலனூரில் நபார்டு திட்டத்தின் கீழ் ரூ.2.57 கோடி மதிப்பீட்டில் கோட்டை மூலனூர் முதல் அக்கரைப்பாளையம் சாலை வரை தார் சாலை அமைக்கும் பணிகளை துவக்கி வைத்தும், தாராபுரம் ஒன்றியம், கொளத்துப்பாளையம் பேரூராட்சி முத்துக்கவுண்டன் வலசில் ரூ.12.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய நியாய விலைக்கடையை திறந்து வைத்தும், முத்து கவுண்டன்வலசு முதல் கரூர் மெயின் ரோடு வரை ரூ.1.51 கோடி மதிப்பீட்டில் புதிய தார்சாலை அமைக்கும் பணியையும், ஆலம்பாளையம் முதல் சாலரப்பட்டி வரை மற்றும் கரூர் சாலை முதல் மதுக்கம்பாளையம் வரை ரூ.81.22 இலட்சம் மதிப்பீட்டில் தார் சாலை அமைக்கும் பணியையும், தாராபுரம் நகராட்சி சூளைமேடு பகுதியில் நகர்ப்புற சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.1.93 கோடி மதிப்பீட்டில் சூளைமேடு முதல் சொக்கநாதம்பாளையம் வரை மற்றும் இதர சாலைகள் அமைக்கும் பணி என மொத்தம் ரூ.7.42 கோடி மதிப்பீட்டில் புதிய திட்டப் பணிகளை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் துவக்கி வைத்தனர்.

இந்நிகழ்ச்சியில் தாராபுரம் வருவாய் கோட்டாட்சியர் குமரேசன், திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன், அவைத் தலைவர் இரா.ஜெயராமகிருஷ்ணன், துணைச் செயலாளர் பெ.பிரபாவதி, பொருளாளர் கே.எம்.முபாரக் அலி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் கே.எஸ்.தனசேகர், ஒன்றிய கழகச் செயலாளர்கள் தாராபுரம் ஒன்றியக்குழு பெருந்தலைவர், எஸ்.வி.எஸ்.செந்தில்குமார், மூலனூர் துரை தமிழரசு, மடத்துக்குளம் மேற்கு க.ஈஸ்வரசாமி, தாராபுரம் நகர கழக செயலாளர், நகர் மன்ற உறுப்பினர் சு.முருகானந்தம், நகர்மன்ற தலைவர், மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர் கு.பாப்புகண்ணன், தாராபுரம் நகராட்சி ஆணையாளர் இராமர், இணை இயக்குநர் (கால் நடை பராமரிப்புத்துறை) மரு.சக்திவேல் பாண்டியன், செயற்பொறியாளர் (பொதுப்பணித்துறை) தியாகராஜன், மூலனூர் பேரூர் கழக செயலாளர், பேரூராட்சி தலைவர் க.தெண்டபாணி, கொளத்துப்பாளையம் பேரூர் கழக செயலாளர் கே.கே.துரைசாமி உள்பட மாவட்ட, ஒன்றிய, நகர, வட்டக் கழக, கிளை கழக நிர்வாகிகள், நகர்மன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள் - துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### புதுக்கோட்டை மாவட்டம்

# பொற்பனைக்கோட்டை தொல்லியல் அகழாய்வுப் பணிகள்!

## அமைச்சர்கள் தங்கம் தென்னரசு - எஸ்.ரகுபதி - சிவ.வீ.மெய்யநாதன் தொடங்கி வைத்தனர்!

புதுக்கோட்டை, மே 24-

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி வட்டம், பொற்பனைக்கோட்டையில், தொல்லியல் அகழாய்வுப் பணியினை, நிதி, மனிதவள மேலாண்மை மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்ட அமைச்சர் எஸ்.ரகுபதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன் ஆகியோர் 20.05.2023 அன்று தொடங்கி வைத்தனர்.

இந்நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் கவிதா ராமு தலைமையில் நடைபெற்றது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழர்களின் தொன்மையையும், அவர்களின் வரலாற்றையும் வெளிக்கொணரும் வகையில் தமிழகத்தில் பல்வேறு இடங்களில் அகழாய்வுப் பணிகளை மேற்கொள்ள உத்தரவிட்டுள்ளார்கள். அதன்படி, புதுக்கோட்டை மாவட்டத்தில் ஆலங்குடி வட்டம், வேப்பங்குடி ஊராட்சியில் தொல்லியல் சார்ந்த இடமான பொற்பனைக்கோட்டை கிராமத்தில் அகழாய்வுப் பணிகளை மேற்கொள்ள தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் உத்தரவிடப்பட்டுள்ளது.

அதன்படி வரலாற்றுச் சிறப்புமிக்க கோட்டையானது 17.75.66 ஏக்கர் பரப்பளவிலும், கோட்டைக்குள் 1.26 ஏக்கர் பரப்பளவில் வாழ்விடப்பகுதியும் அமைந்துள்ளது. இவ்வாழ்விடப்பகுதியின் காலமானது இரும்பு காலத்தில் தொடங்கி பிற்காலம் வரை தொடர்கிறது. இப்பகுதியில் இருந்து இரும்புக்கால ஈமச்சின்னங்கள், கருப்பு சிவப்பு பானை ஓடுகள், வரலாற்றுக்கு முந்தைய செங்கற்கள் கண்டறியப்பட்டன. தமிழ்நாடு திறந்த நிலை பல்கலைக்கழகத்தால் 2021ம் ஆண்டு முனைவர் இனியன் தலைமையில் அகழாய்வு அகழாய்வில் தமிழ் எழுத்து பொறிப்புகளைக் கொண்ட பானை ஓடுகள், சதுரங்க ஆட்டக்காய்கள், சங்கு வளையல்கள், எலும்பு ஆயுதங்கள் மற்றும் வட்டச் சில்லுகள் கண்டறியப்பட்டன.

தமிழ் எழுத்து பொறிப்பு பெற்ற கி.பி. 4ஆம் நூற்றாண்டைச் சார்ந்த வீரக்கல் ஒன்று கண்டறியப்பட்டது. இந்த வீரக்கல் கணங்குமரன் என்பவருக்காக எடுக்கப்பட்டதாகும். பொன் கொங்கர் விண்ணகோன் காலத்தில் அதவனூரைச் சார்ந்த கணங்குமரன் என்பவர் ஆநிரைப் பூசலில் பசுக் கூட்டத்தைக் கைப்பற்றி இறந்தமைக்காக எடுக்கப்பட்டதாகும். கொங்கு என்ற வார்த்தையானது பொதுவாக கொங்கு நாட்டினை குறிப்பதாக கருதுவர். அச்சொல் கல்வெட்டுகளில் பயின்று வருவது இதுவே முதல் முறையாகும்.

சிதிலமடைந்த நிலையில் இருக்கும் கோட்டையின் காலமானது 1314ம் நூற்றாண்டினைச் சார்ந்ததாக இருக்கக்கூடும். பொற்பனைக்கோட்டையின் பெயரானது பொன்பரப்பினான் என்ற அடை மொழியினை கொண்ட பாண அரச குலத்தை சார்ந்த குறுநில மன்னனால் கட்டியிருக்கக் கூடும் என்றும், பொற்பனை அல்லது பொன் பனை என்ற கிராமத்தின் பெயருடன் பொற்பனைக் கோட்டை என கோட்டை என்ற சொல் இணைந்து அழைக்கப்படலாயிற்று என்ற இரு கருத்துக்கள் காணப்படுகின்றன. கோட்டையானது 2.5 கி.மீ சுற்றளவினை கொண்டுள்ளது. பாதுகாப்பு அரணானது பரப்பளவில் 566 ஏக்கரிலும், ஒட்டுமொத்த கோட்டையானது 17.75.66 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. மூன்று நுழைவு வாயிலினை (கிழக்கு, மேற்கு மற்றும் வடக்கு) கொண்டதாக இக்கோட்டை உள்ளது. கோட்டையின் வடக்கு நுழைவு வாயிலானது செங்கற்களினால் கட்டப்பட்டதாகும். கோட்டையின் வெளிப்புறத்தில் கிடைக்கும் செங்கற்கள் மூன்று அளவுகளில் (44x22×11 செ.மீ. 42x21x10 செ.மீ. மற்றும் 36×18×40 செ.மீ.) காணப்படுகிறது. மேற்பரப்பானது செம்புரான் கற்களை கொண்டு அமைக்கப்பட்டதாகும்.

இக்கோட்டை 15×36 மீ. அளவுடன் 32 கோட்டை கொத்தளங்கள் மற்றும் அதன் எச்சங்களை காணும் போது இக்கோட்டை மாளிகையுடன் இருந்திருக்க வேண்டும் எனத் தெரிகிறது. கோட்டையின் நான்கு புறங்களிலும் முனீஸ்வரன் மற்றும் கருப்பன் கோவில்கள் அமைந்துள்ளன. கோட்டையின் உள்புறத்தில் நீராழி குளம் அமைந்துள்ளது. அதன் அருகில் வாழ்விடப்பகுதியானது கண்டறியப்பட்டது. இங்கிருந்து கருப்பு சிவப்பு பானை ஓடுகள், சிவப்பு பானை ஓடுகள் மற்றும் கருப்பு பானை ஓடுகள் கண்டறியப்பட்டன. பானை ஓடுகள் சிலவற்றில் கீறல்கள் மற்றும் தமிழ் பிராமி பொறிப்புகள் கிடைக்கின்றன. இதனைத் தவிர கண்ணாடியினால் செய்யப்பட்ட மணிகள், வளையல்கள், பவள கற்கள், சுடு மண் பொருட்கள், இரும்பு உருக்கியதற்கான சான்றுகள் கிடைக்க பெற்றன. இரும்பினை உருக்கிய எச்சங்களானது கோட்டையின் தெற்கு பகுதியில் கண்டறியப்பட்டன. இரும்பு துண்டுகள், சுடுமண் குழாய்கள் கழிவுகள் கிடைத்துள்ளன. இந்த இடம் தற்போது கரிமேடு என்று அழைக்கப்படுகிறது. மேலும், செம்புறாங்கல் பாறையிலேயே வட்டம், நீள்வட்டம் வடிவிலான குழிகள், கருப்பு, கருப்பு சிவப்பு, சிவப்பு பானை ஓடுகள் கண்டறியப்பட்டன. மேற்கண்ட தொல்லியல் சான்றுகளின் அடிப்படையில் பொற்பனைக்கோட்டை அகழாய்வு மேலும் பல தொல்லியல் மற்றும் வரலாற்று ஆதாரங்களை வெளிகொணர்வதை நோக்கமாகக் கொண்டு நடத்தப்படுகின்றது.

அதனடிப்படையில், பொற்பனைக்கோட்டை தொல்லியல் அகழாய்வுப் பணியினை, நிதி, மனிதவள மேலாண்மை மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு , சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்ட அமைச்சர் எஸ்.ரகுபதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் ஆகியோர் தொடங்கி வைத்தனர்.

இந்நிகழ்ச்சியில், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எம். அப்துல்லா, புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை.முத்துராஜா , கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் எம்.சின்னத்துரை, மாவட்ட வருவாய் அலுவலர் தமா. செல்வி, தொல்லியல் துறை இயக்குநர் சே.ரா.காந்தி, வருவாய் கோட்டாட்சியர் முருகேசன், திருவரங்குளம் ஒன்றியக்குழுத் தலைவர் வள்ளியம்மை தங்கமணி, இணை இயக்குநர் இரா. சிவானந்தம், தொல்லியல் ஆலோசகர் பேராசிரியர் க.ராஜன், பொற்பனைக் கோட்டை அகழாய்வு இயக்குநர் த.தங்கதுரை, வட்டாட்சியர் விஸ்வநாதன், வி.என்.மணி, அரு. வீரமணி, க.மதியழகன், ஸ்ரீதேவி அண்ணாதுரை, தென்னலூர் எம்.பழனியப்பன, கே.எம்.சுப்பிரமணியன், மகேஸ்வரி சண்முகநாதன், டி.தங்கமணி, பொன், கணேசன், சக்தி ராமசாமி, அரு.வடிவேல், குமார், ரவி, கணேசன், எம்.எம்.பாலு, கே.சி.சிவக்குமார் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

### முதல்வர் மு.க.ஸ்டாலினின் ‘உங்களில் ஒருவன்’ நூல் பற்றி - பெரியார் திடலில்

# கவிஞர் தஞ்சை கூத்தரசன் தொடர் சொற்பொழிவு!

## மாம்பலம் ஆ.சந்திரசேகர் தொடக்க உரையாற்றுகிறார்!

சென்னை, மே 24-

இதுகுறித்து பெரியார் நூலக வாசகர் வட்டத்தின் தலைவர் வழக்கறிஞர் திருமதி.ஆ.வீரமர்த்தினி தன் அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

உலகம் போற்றும் ஒப்பற்ற பகுத்தறிவு பேராசான் தந்தை பெரியாரின் அறிவுப் பாசறை பெரியார் நூலக வாசகர் வட்டத்தின் சார்பில், நாளை (25.5.2023 வியாழக்கிழமை) மாலை 6.30 மணியளவில் சென்னை, தந்தை பெரியார் திடலிலுள்ள அன்னை திருமதி ஈ.வெ.ரா.மணியம்மையார் அரங்கில் என். (ஆ.வீரமர்த்தினி) தலைமையில் நிகழ்ச்சி ஒன்று நடைபெறுகிறது.

அந்நிகழ்வில் தி.மு.க. தலைமை இலக்கிய அணிப் புரவலர் தஞ்சை.கூத்தரசன் தமிழக முதல்வர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்கள் எழுதிய ‘உங்களில் ஒருவன்’ நூலைப் பற்றி ஏழாவது தொடர் சொற்பொழிவினை ஆற்றுகிறார்.

சென்னை தென்மேற்கு மாவட்ட அவைத் தலைவர் மாம்பலம் ஆ.சந்திரசேகர் தொடக்க உரை நிகழ்த்துகிறார். பெரியார் நூலக வாசகர் வட்ட நிர்வாகிகள் ஏ.வெங்கடேசன், தென்மாறன், வழக்கறிஞர் மணியம்மை, ஜெனார்தனம் ஆகியோர் நிகழ்ச்சிக்கு முன்னிலை வகிக்கின்றனர்.

எனவே இந்நிகழ்ச்சிக்கு அனைவரும் அணி திரண்டு வரவேண்டும் என கேட்டுக்கொள் கிறேன்.

இவ்வாறு அவர் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.



நாமக்கல் மாவட்டத்தில் நகர்ப்புற கைத்தறி நெசவாளர்கள் மானியத்துடன் கூடிய வீடு கட்டும் திட்டத்திற்கு தேர்வு செய்யப்பட்ட 13 பயனாளிகளில் 3 பேருக்கு பணி ஆணைகளை மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என். இராஜேஸ்குமார் முன்னிலையில் வனத்துறை அமைச்சர் டாக்டர் மா.மதிவேந்தன் வழங்கினார். இந்நிகழ்வில் வெண்ணந்தூர் ஒன்றியச் செயலாளர் ஆர்.எம்.துரைசாமி, வெண்ணந்தூர் பேரூராட்சி தலைவரும், பேரூர்க் கழகச் செயலாளருமான ஆர்.எஸ்.எஸ்.இராஜேஸ்குமார், திருச்செங்கோடு சரக உதவி இயக்குனர் வ.செந்தில்குமார், துறை அலுவலர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.




சேலம் கிழக்கு மாவட்டம் நரசிங்கபுரம் நகர தி.மு.க சார்பில் திராவிட மாடல் ஆட்சியின் இரண்டு ஆண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டம் நரசிங்கபுரம் நகரச் செயலாளர் வேல்முருகன் தலைமையில் நடைபெற்றது.இதில் தலைமைக் கழகப் பேச்சாளர் இறையன்பு குத்தூஸ் திராவிட மாடல் சாதனைகளை எடுத்துரைத்து சிறப்புரையாற்றினார்.கூட்டத்தில் மாவட்ட அவைத்தலைவர் கருணாநிதி, நகர மன்ற தலைவர் அலெக்சாண்டர், கவுன்சிலர்கள் பிரகாஷ், சின்னபையன்,தில்லை செல்வம், அன்னக்கிளி,புஷ்பாவதி, ஜோதி, நகர நிர்வாகிகள் ராமசாமி, இளவரசு, பரமசிவம், விஜயகுமார், ஞானம் சேகர், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் சிவராமன், மற்றும் நகர நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.